**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.38** **நாள்: 21.03.2018**

**வேளச்சேரி பிரதான சாலை எரிவாயு மயான பூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் அருகில் உள்ள கோட்டூர்புரம், வேளச்சேரி மற்றும் பெசன்ட் நகர் மயான பூமிகளை பயன்படுத்தி கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, அடையாறு மண்டலம், வேளச்சேரி பிரதான சாலை, வார்டு–174ல் அமைந்துள்ள எரிவாயு மயானபூமியில், எரிவாயு தகனமேடையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இருப்பதால், அதனை சீர்செய்யும் பொருட்டு 22.03.2018 அன்று ஒரு நாள் மட்டும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட உள்ளது.

மேலும், பராமரிப்பு பணி நடைபெறும் நாட்களில் அருகில் கோட்டூர்புரம், வேளச்சேரி மற்றும் பெசன்ட் நகர் மயான பூமிகளை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**